# மாசிலன்

**Author: SujeethG**

Copyright 2014 by SujeethG
All rights reserved

WSA,Essex
United Kingdom

01 INT. Visiting Room Day

*மாயாவின் வீட்டில் மாசிலன் வெளியில் செல்வதற்கு ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறான். மாயாவும் வெளியே செல்ல ஆயத்தமாகியபடி இருக்கிறாள் அவளிடம் வந்து மாசிலன்*

***மாசிலன்***

*அம்மா நான் திங்கக்கிழமையும் நிண்டுட்டு வரட்டா?*
School *இல்லத்தானே!?*

***மாயா***

*இல்லையா, சனி ஞாயிறு மட்டும்தான் அங்க நீங்க நிக்கலாம்.*

மாசிலன் ஏமாற்றமாக சற்றுக் கவலையுடன் திரும்ப நடந்து போகிறான்

CUT TO:

02 INT. Office Room Day

சட்டத்தரணி சஞ்சயின் அலுவலகத்தில் சீலன் அமர்ந்திருக்கிறான். சஞ்சய் தனக்கு முன்னால் இருந்த கணிணியைப் பார்த்தபடி யோசித்துவிட்டு சீலனிடம் பேசுகிறார்.

***சஞ்சய்***

Courts Orderல *2 நாளெண்டு ஒழுங்கா பிரச்சனையில்லாமல் ஓடிக்கொண்டிருக்கு, இப்ப இதுக்குள்ள தேவையில்லாமல் ஒண்டையும் குழப்பாமல் இருக்கிறதுதான் நல்லதெண்டு நினைக்கிறன்*

சீலன் வேறு என்ன செய்வதென்று தெரியாமல் யோசித்துவிட்டு எழுந்து செல்கிறான்.

CUT TO:

03 EXT. House Gate Day

மாசிலன் பையினை எடுத்துக்கொண்டு வெளியே போகிறான். மாயாவும் அவன் பின்போகிறாள். சீலன் மாயா வீட்டு வாசலில் வந்து மாசிலனின் பையை வாங்கி அழைத்துச் செல்கிறான்

FADE OUT:

INT. Visiting Room Night

மாயாவும் அவள் தாயும் Sofaவில் அமர்ந்திருந்திருக்கின்றனர். மாயா தேனீர் குடித்தபடி ஏதோ யோசினையில் இருக்கிறாள். தாய் புத்தகம் வாசித்தபடி இருக்கிறார்.

***மாயாவின் அம்மா***

*நீ அவன பற்றியெல்லாம் யோசிக்காத, வேலையில வேற இடத்துக்கு மாற்றம் வந்ததால, Judge எப்பிடியும் உனக்கு Full Custody தருவார்.*

***மாயா***

*ம்.. சில நேரங்களில சில விசயங்களுக்கு அவசரப்படுறமோ எண்ட மாதிரி இருக்கு.*

***மாயாவின் அம்மா***

*இஞ்ச, சும்மா இப்படிக் ஒரே குழம்பிக் கொண்டிருக்காத. 12 வருசம் பொறுத்தனி தானே? நான் அப்பவே சொன்னன் கேட்டியே?*

மாயா தனது கைகளில் இருந்த தேனீரினை பார்த்தபடி யோசித்துவிட்டு குடுக்கிறாள்.

FADE OUT:

04 INT. Visiting Room Day

மாசிலன் சீலனின் கைத்தொலைபேசியில் ஏதோ தோண்டியபடி இருந்து விட்டு தன்னை ஒரு படமெடுத்துவிட்டு அதைப் பார்க்கிறான். சீலன் வீட்டு வேலை செய்தபடி இருக்கிறான். மாசிலன் எழுந்து வந்து சீலனையும் தன்னையும் சேர்த்து ஒரு படமெடுக்கிறான். பின்போய் Sofaவில் அமர்ந்து அதைத் தோண்டிக்கொண்டு இருக்கிறான். பின்னர் திரும்பி சீலனிடம்

***மாசிலன்***

*சுயநலம் எண்டா என்னப்பா?*

சீலன் தனது வேலையைச் செய்தபடியே மாசிலனுக்குப் பதில் சொல்கிறான்

***சீலன்***

Selfishness! *ஏன் கேக்கிறீங்கள்?*

மாசிலன் அதுக்குப் பதில் சொல்லாமால் ஆறுதலாக அடுத்த கேள்வியைக்கேட்கிறான்

***மாசிலன்***

*உங்களுக்கு முந்தியே அம்மாவப் பிடிக்காதா அப்பா?*

சீலன் தனது வேலையைச் விட்டுவிட்டு மாசிலனைத் திரும்பிப் பார்த்துவிட்டு

***சீலன்***

*அம்மா ஏதாவது சொன்னவவா?*

அதற்கு மாசிலன் இல்லை என்று தலையாட்டியாட்டுகிறான். சீலன் சற்றுக்கோபமான முகத்துடன் சற்று உரிமையான குரலில்

***சீலன்***

*அம்மம்மா என்னய்யா சொன்னவவா?*

***மாசிலன்***

*நீங்கள் வீசா எடுக்கத்தான் அம்மாவக் கலியாணம் கட்டினீங்களாம் எண்டு. அம்மாட்டத்தான் சொன்னவ*

சீலன் சற்றுப் பொறுத்திருந்து பின் சிரித்து விட்டு. மாசிலனிடம்

***சீலன்***

*தம்பி உங்கட வீட்டுவேலையைச் செய்து கொண்டிருங்கோ நான் பக்கத்தில கடைக்கு ஒருக்கா ஓடிப்போட்டு ஓடியாறன்*

CUT TO:

05 EXT. House Door Day

சீலன் மாயாவின் வீட்டுக் கதவினைத் தட்டி விட்டு கோபத்தில் மறுபக்கம் திரும்பிப் பார்த்தபடி நிக்கிறான். மாயா கதவினைத் திறக்க சீலன் மாயாவை நோக்கித் திரும்புகிறான்

***சீலன்***

*எத்தின வருசத்துக்கு வீசாக்கதையை சொல்லிக்கொண்டு இருக்கப்போறா உண்ட அம்மா? திருந்த மாட்டுதே அந்த மனிசி?*

***மாயா***

*பிள்ளையத் தனிய விட்டுட்டே வந்தனீங்க*

மாயா சற்று ஏமாற்றத்துடன் கேட்க சீலன் ஏமாற்றத்துடன் பார்க்கிறான்.

FADE OUT:

06 INT. Outside Day

சீலன் Parkல் இருக்கிறார். கைதொலைபேசி ஒலிக்கிறது.

***சீலன்***

Hello *சொல்லுங்க சஞ்சய்*

மறுமுனையிலிருந்து சஞ்சய் அதிருப்தியுடன் பேசுகிறார்.

***சஞ்சய்***

*என்ன சீலன் நீங்க? அவ* full Custodyக்கு Case *போட்டிருக்கேக்க, அங்க போய் நீங்க சண்டை பிடிச்சருக்கிறீங்க? மகனை வேற தனிய விட்டுட்டு போயிருக்கிறீங்க*

சீலன் செய்வதறியாது யோசித்தபடி இருக்கிறான்.

FADE OUT:

07 INT. Visiting Room Night

சீலனின் வீட்டு அறையில் மாசிலன் கட்டிலில் படுத்திருக்கிறான் சீலன் அறைக்குள் வருகிறான்.

***மாசிலன்***

*இனி உங்கள நான் பாக்க வரமாட்டனா அப்பா? மகன் அப்பாவைப் பாக்கக்கூடாது எண்டு* Courts *சொல்லுமா?*

சீலன் கட்டிலில் மாசிலன் பக்கத்தில் உட்காருகிறான்.

***சீலன்***

Courts *அப்பா மகன்* Justice *எண்டெல்லாம் பாக்காது. யார் நல்லா* Argue *பண்றாங்கள் எண்டுதான் பாக்கும். நீங்கள் ஏன் அதுகளைப் பற்றி இப்ப யோசிக்கிறீங்கள்?*

***மாசிலன்***

*அப்பா நீங்கள் ரெண்டு பேருமே நல்ல ஆக்கள்தானே பிறகு ஏன்* Separate *ஆனீங்கள்?*

***சீலன்***

*இந்த உலகத்தில சில விசயங்கள் ஏன் நடக்கிறது எண்டு தெரியாது, அதுகளுக்காக யாரையும் யாரும் குற்றம் சொல்லவும் ஏலாதய்யா! எல்லாத்தையும் பாத்துக்கொண்டு கடந்து போய் கொண்டு இருக்க வேண்டியதுதான்*

***மாசிலன்***

*அப்பா ஏன் எனக்கு வேற சகோதரங்கள் இல்லை?*

சீலன் இதை எதிர்பார்க்காதவனாய் மகனை ஆறுதற்படுத்த முயல்கிறான்

***சீலன்***

*ஐயா ஒண்டுக்கும் யோசிக்காதேங்கோ! உங்கள அப்பாவோ அம்மாவோ தனிய விடமாட்டம். அப்பா அம்மா எப்பவும் உங்களோட இருப்பம் சரியோ! அப்பிடி அப்பாவ இனி நீங்கள் பாக்கமுடியால் போனாலும் ஒரு விசயம் நினைவு வைச்சுக்கொள்ளுங்கோ! நான்தான் உங்கட அப்பா. நான் எங்கயிருந்தாலும் எப்பவும் உங்களுக்காண்டி இருப்பன்.*

FADE OUT:

08 EXT. Outside Of the House Day

மாயா Shopping செய்துவிட்டு காரில் வீடு வருகிறாள். வீட்டிற்குள் Game விளையாடிக் கொண்டிருந்த மாசிலன் கார் சத்தம் கேட்டு எழுந்து சென்று அம்மா வாங்கி வந்த பொருட்களை Car Bootல் இருந்து எடுத்து உள்ளே வைத்துவிட்டு மீண்டும் வந்து பொருட்களை எடுக்கிறபோது ஒரு தந்தையும் மகனும் துள்ளித் துள்ளி விளையாடியபடி சிரித்துக்கொண்டு போவதைப் புன்முறுவலுடன் நின்று பார்க்கிறான். பொருட்களை எடுத்து வீட்டிற்குள் வைத்துவிட்டு வெளியே வந்த மாயா இதைப் பார்க்கிறாள். மாயா வந்து மாசிலனின் தோளில் மெதுவாக கை வைக்கிறாள். மாசிலன் மாயாவில் சாய அவள் இவனை அணைக்க அவள் கைகளைப் பிடித்தபடி அவர்களைப் பார்க்கிறான். மாயாவும் பார்த்துவிட்டு கீழே தன் மகனைப் பார்த்து அவன் தலையினை கோதுகிறாள்.

CUT TO:

09 EXT. Inside a Car Day

சட்டத்தரணி சஞ்சய் காரை நோக்கி பின்னால் நடந்து வருகிற சீலனைத் தன் கண்ணாடியில் பார்க்கிறார். சீலன் வந்து காரினுள் ஏறுகிறான்.

***சஞ்சய்***

*ம்! நான் பயந்த மாதிரி கோட்ஸ் அவங்களுக்கு சார்பாத்தான் தீர்ப்பு தந்திருக்கு. அவ வெளியூர் போக முதல் உம்மட்ட காட்டிட்டுப் போற மாதிரி நான் permission எடுத்திருக்கிறன்*

சீலன் கவலையில் மெதுவாக மேலே பார்த்து நெற்றியில் கைவைத்தபடி திரும்பி

**சீலன்**

*இதுக்கு எதிரா நாங்க வழக்குப் போடேலதா?*

**சஞ்சய்**

*போடலாம்! ஆனாலும் இங்கத்தய நாடுகளில பொம்பிளயளுக்குத்தான் சட்டம்* Support *பண்ணும். உம்மட காசுதான் வீணாகும்.* Divorce Case *சம்பந்தமா அடிபடுறதால* Gain *பண்ணுறது* Lawyers *மட்டும்தான். நீர் என்ட* Friend *அதாலதான் இதைச் சொல்லுறன்.*

அதைப் புரிந்தவனாய் சரி என்று தலையசைத்து விட்டு சீலன் காரினுள் இருந்து வெளியேறுகிறான்

**சஞ்சய்**

*திருப்ப அங்கபோய் சண்டை பிடிக்காதேயும் பிறகு பிடிச்சு* prison*ல போட்டு விடுவாங்கள்*

சரி என்று தலையசைத்து விட்டு சீலன் விடைபெறுகிறான்.

CUT TO:

10 EXT. House Door Day

சோர்வோடு சீலன் மாயாவின் வீட்டுக் கதவினைத் தட்டி விட்டு காத்திருக்கிறார் மாயா கதவைத் திறக்கிறாள். மாயா என்னவென்று தெரியாமல் பார்த்தபடி நிற்கிறாள் சீலன் பேச்சு வராமல் சில வினாடி நின்றுவிட்டு

**சீலன்**

*நான் 25 வயசில நாட்ட விட்டுட்டு வந்தனான். என்ர அப்பா 2 வருசத்துக்கு முதல்... ஆனால் நல்லா யோசிச்சுப்பாத்தா எனக்கு 25 வயசோடயே அப்பா இல்லாமல் போய்ட்டார். என்ட பிள்ளைக்கு 10 வயசோட இல்லாமப் போக வைச்சிட்டாய் நீ*

கண்ணீரோடு சொல்லிவிட்டு சீலன் திரும்பி நடந்து செல்கிறான். மாயா குழம்பியபடி பார்த்துக்கொண்டு நிக்கிறாள்.

CUT TO:

11 INT. Visiting Room Night

சீலன் தனது கணிணியில் இருக்கும் தனது மகனின் படத்தைப் பார்த்தபடி இருக்கிறான்.

CUT TO:

12 INT. Bed Room Night

மாசிலன் தனது தந்தையின் புகைப்படத்தினை பார்த்தபடி இருக்கிறான்.

FADE OUT:

13 INT. Visiting Room Night

மாயாவும் அவள் தாயும் மாசிலன் Sofaவில் அமர்ந்திருந்திருந்து தொலைக்காட்சி பார்க்கிறார்கள். மாசிலன் எழுந்து செல்கிறான்.

***மாயா***

*தம்பி இனிமேல் அப்பாவப் பாக்கேலாமல் போகும், உங்களுக்கு OK தானே ஐயா?*

மாசிலன் தலையசைத்து விட்டுப்போகிறான். ஆயினும் அவன் உடல்மொழியில் அவனை அறிந்த மாயா அவன் போனதும் அவளது தாயைப் பார்க்கிறாள்.

***மாயாவின் அம்மா***

*தயவு செய்து திரும்பிக் குழம்பாத! அவன் சின்னப்பெடியன், கொஞ்ச நாளில சரியாகிடுவான்*

மறுபடியும் குழப்பத்தோடு மாயா அங்குமிங்கும் பார்க்க

***மாயாவின் அம்மா***

*மாயா எவ்வளவு செலவழிச்சு, எவ்வளவு கஸ்டப்பட்டு*
*இப்படி ஒரு முடிவ Courtsல இருந்து எடுத்திருக்கிறம்.*
*அதையாவது கொஞ்சம் யோசிச்சுப் பார்!*
*தயவுசெய்து மொக்குத்தனமா நடக்காத*
*வெளிக்கிடுற அலுவலப்பார் மாயா*

மாயா தனது தாயாரின் பேச்சுக்கு அரை மனதாய் தலையசைத்துவிட்டு எழும்பி நடக்கும்போது மாசிலன் அறைக்குள் ஒரு படத்தினைப் பார்த்துவிட்டு தலையணைக்குள் வைப்பதைப் பார்க்கிறாள்! மெல்ல அவனை நோக்கி நடக்கிறாள்.

FADE OUT:

14 EXT. Park Day

சீலன் பார்க்கில் கதிரையில் அமர்ந்திருக்கிறான். மாயா அவனை நோக்கி வருகிறாள் மாசிலன் வரவில்லை.

*மாயா*

*நேற்றில இருந்து ஒரே குழப்பம்!*

நிறுத்தி, தனக்குள் ஒரு வினாடி யோசித்து விட்டு பின் தொடர்கிறாள்

*மாயா*

*நீங்க நல்ல கணவனா இல்லையா எண்டு எனக்குத்
தெரியாது இனி அதப்பற்றி அக்கறைப் பட்டு
பிரியோசனமும் இல்ல. ஏனெண்டா என்ட
வாழ்க்கை நான் நினைச்ச மாதிரி எனக்கு அமையேலயே.
அது மாதிரி நானும் நல்ல மனைவியா இல்லையா
எண்டும் எனக்குத் தெரியாது.*

சற்று நிறுத்தி கண்கள் கலங்கியபடி மாயா தொடர்கிறாள்

*மாயா*

*ஆனா...! ஒரு உதவாத தாய் எண்டு என்னை
யாரும் சொல்லக்கூடாது முக்கியமா என்ட பிள்ளை
நாளைக்கு வளர்ந்து என்னட்ட அதச் சொல்லக்கூடாது.
என்ட பிரச்னையால நான் அவன்ட உலகத்தை உடைக்க
மாட்டன். எனக்கெப்பிடியோ ஆனால் அவனுக்கு அவன்ட
அப்பா Hero. என்ட பிள்ளை எப்பவெல்லாம் அப்பாட்டை
போப்போறன் எண்டு நினைக்கிறானோ அப்பவெல்லாம்
போகட்டும். நான் புதுவேலைய வேண்டாமெண்டுட்டன்.
தம்பி காருக்குள்ள இருக்கிறான்!*

சொல்லிவிட்டு மாயா காரை நோக்கித் திரும்பி நடக்கிறாள். சீலன் கண்ணீரோடு விலகிப்போகிற மாயாவைப் பார்த்தபடி நிற்கிறான். மாசிலன் பையுடன் காரை விட்டு சிரித்தபடி இறங்குகிறான்

CUT TO BLACK: